# <u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

கீழே கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதி தொலைவரியில் அனுப்பவும். இது இவ்வாரத்திற்கான பாடம். அதனால், இக்கேள்விக்கான பதிலை புதன்கிழமைக்குள் அனுப்பி விடவும். அதோடு, இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) செவ்வாய் இரவு 8.30 மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.]

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

ஆசானைத் தந்தையென வணங்க வேண்டும்
அவர்சொல்லும் அறிவுரைக்கும் இணங்க வேண்டும்
கூசாமல் தன்கருத்தைக் கூற வேண்டும்
குற்றமுண்டேல் ஒப்பிமனம் மாற வேண்டும்
**மாசான** வார்த்தையெதும் ஆசான் மாட்டு
மறந்தேனும் ஒருபோதும் பேசான் என்ற
ஆசாரம் உள்ளவனே நல்ல சீடன்
அறனறிந்த நல்வாழ்விற் கருக னாவான்

(நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை)

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

3. (i) '**மாசான**' என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

(ii)

| |
|---|
| ஆசானைத் தந்தையென வணங்க வேண்டும்<br>அவர்சொல்லும் அறிவுரைக்கும் இணங்க வேண்டும் |

மாணவர்கள் ஆசிரியர்களை எவ்வாறு **போற்ற வேண்டும்**? (2 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. கவிச்சக்கரவர்த்தி நாடக ஆசிரியரின் **பிற படைப்புகளுள்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **துணைக்கதைப்பாத்திரம்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **சமுதாயப் பின்னணி** ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> சோழன் : கம்பரே, தங்களை ஆஸ்தான கவியாக்கிக் கௌரவிக்கவே முதன்முதலில் தங்களை ஊரிலிருந்து அழைத்துவரச் செய்தேன். எங்கள் முன்னோருடைய வித்யா குருவாக இருந்துவரும், தமிழ் கூறும் உலக மெங்கும் போற்றிப் புகழப்படுகிறவருமான கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தருக்குச் சமானமான நிலைக்குத் தங்களை உயர்த்தி, "இருவரும் ராமாயணம் இயற்றுங்கள்" என்று சொன்னேன். தங்களைப் பற்றிக் கேள்விப்பட்டவற்றையெல்லாம், முயற்சி செய்து மறந்து, **தங்களை அரவணைத்தேன்**. இதையெல்லாம் தாங்கள் உணரவில்லையா? எதற்காக என்னிடம் தாங்களுக்கு இந்த வெறுப்பு?
>
> கம்பர் : குலோத்துங்கா, உன்னிடம் எனக்கு ஏன் வெறுப்பு? சடையப்ப வள்ளலை எச்சரிக்கை செய்த உன்னுடைய சிறு செயல் ஒன்றைத் தவிர, உன்னிடம் நான் வேறு எந்தக் குறையும் காணவில்லை.உன்னை விட அதிகமாகப் பரந்த உள்ளமும், கடவுள் பக்தியும், தமிழறிவும் படைத்த மன்னர்கள் வேறுயாருமே இருந்திருக்க முடியாது.
>
> *(அங்கம் 1, காட்சி 21, பக்கம் 132-133)*
> *(பாரி நிலையம் 2015)*

(i) இச்சூழலில் வெளிப்படும் கம்பரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இக்சூழலில் காணப்படும் **மொழிநடை** ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

(iii) **தங்களை அரவணைத்தேன்** என்பதன் **சூழலுக்கேற்ற** பொருள் யாது? (2 புள்ளி)

## பிரிவு மூன்று : நாவல்

7. அகல்விளக்கு நாவலாசிரியர் ஈடுபட்ட **துறை** ஒன்றனைக் குறிப்பிடுக? (2 புள்ளி)

8. (i) அகல்விளக்கு நாவலின் **பெண் கதைப்பாத்திரம்** ஒன்றனை குறிப்பிடுக? (2 புள்ளி)

   (ii) அகல்விளக்கு நாவலின் **கருப்பொருள்** யாது? (2 புள்ளி)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> "அய்யோ! அப்படிப்பட்ட குடும்பத்திலா போய் அகப்பட்டுக் கொள்ள வேண்டும்?" என்று வருந்தினேன். என்னுள் சிறு நடுக்கம் உணர்ந்தேன்.
>
> "என்ன செய்வது? போனான். போன இடத்தில் ஒரு பெண்ணின் அன்பு கிடைத்தது. பிறகு என்ன விளையும் என்று எண்ணிப் பார்க்காமல் கொஞ்சம் திரும்பினால் இப்படித்தான். **கல்லும் முள்ளும் காலைப் பொத்தும்**" என்றார்.
>
> "என்ன தொழில் செய்கிறான்" என்றார்.
>
> "அதையும் கேட்டேன். தேயிலைத் தோட்டத்தில் முதலில் கூலி வேலைக்குத்தான் போனானாம். பிறகு அவனுக்கு ஆங்கிலப் படிப்பு இருப்பதாகத் தெரிந்து கொண்டு கணக்குப் பிள்ளை வேலை கொடுத்திருக்கிறார்களாம்.
>
> (*அத்தியாயம் 18, பக்கம் 235-236*)
> (*பாரி நிலையம் 2015*)

(i) இச்சூழலில் வெளிப்படும் சாந்தலிங்கத்தின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **மொழிநடை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(iii) **கல்லும் முள்ளும் காலைப் பொத்தும்** என்பதன் **சூழலுக்கேற்ற பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி

[15 புள்